## 10.2 பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பொறியாளர் பணியமைப்பு–கூடுதல் பணியிடங்கள் தோற்றுவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண். 93 நாள். 28.05.1998

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண். 99 ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 29.4.97
2. அரசாணை (நிலை) எண். 245. ந.நி.ம.கு.வ.துறை நாள்: 8.10.97
3. பேரூராட்சிகள் இயக்குநரின் கடித எண். 26349/97 நாள்: 19.12.97 மற்றும் நேர்முகக் கடிதம் எண். 26349/97 அ3. நாள்.13.3.98

**ஆணை :**

அரசாணை (நிலை) எண். 99, ந.நி.ம.கு.வ.துறை, நாள்: 29.4.97ல் பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்த ஏற்கனவே பேரூராட்சிகளில் அயற்பணி மேற்பார்வையாளர்களுடன் கூடுதலாக 29 இளநிலைப் பொறியாளர்களில் 10 உதவி செயற்பொறியாளர்களையும் நியமனம் செய்யவும் இப்பணியாளர்களின் தலைமையிடம் ஆட்சி எல்லை முதலியன குறித்தும் ஆணையிடப்பட்டது. பின்னர் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்படி பணியிடங்களோடு மேலும் கூடுதலாக 5 உதவி செயற்பொறியாளர்களை நியமனம் செய்யவும் ஆணையிடப்பட்டது. இதையடுத்து ஆட்சி எல்லை செயற்படுத்தப்படும் பணிகளின் மதிப்பு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களின் அடிப்படையில் பேரூராட்சிகளில் பொறியாளர் பணியிடங்களுக்கு அளவுகோல் நிர்ணயிக்க தக்க செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்கும்படி பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. பேரூராட்சிகளில் நடைபெறும் அன்றாடப் பணிகளை செயல்படுத்த அடிப்படையான பொறியாளர் பிரிவு ஒன்றின் தேவையையும் சராசரி மூலதனப் பணிகளுக்கும் கூடுதலாகப் பணிகள் நடைபெறும் தொகுப்பு பேரூராட்சிகளில் தேவையின் அடிப்படையில் பொறியாளர்களை கூடுதலாக பணியமர்த்துவதையும் கருத்தில்கொண்டு பேரூராட்சித் துறையில் கீழ்க்கண்டவாறு பொறியாளர் பணியிடங்கள் ஏற்படுத்தலாம் என பேரூராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### I. அடிப்படையான பொறியாளர் பிரிவு (Core Group)

பேரூராட்சிகளில் அன்றாடம் நடைபெறும் பணிகளை செயல்படுத்த கீழ்கண்டவாறு பொறியாளர் பணியிடங்களை ஏற்படுத்தலாம்.

i) பேரூராட்சிகளில் நடைபெறும் பணியின் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டிற்காக பேரூராட்சிகள் இயக்ககத்தில் ஒருசெயற் பொறியாளர் பணியிடத்தையும் அவருக்கு உதவியாக இரண்டு வரைவாளர் பணியிடத்தையும் ஏற்படுத்தலாம்.

ii) மண்டல அளவில் ஒரு மண்டலத்திற்கு ஒரு பணியிடம் என்ற வீதத்தில் உதவி செயற்பொறியாளர் பணியிடத்தையும் பெறப்படும் பணி மதிப்பீடுகள் மற்றும் பட்டியல்கள் முதலியவற்றை கூர்ந்தாய்வு செய்வதில் உதவி செயற்பொறியாளருக்கு உதவி செய்ய ஒரு வரைவாளர் பணியிடத்தையும் ஏற்படுத்தலாம்.

iii) ஒவ்வொரு மண்டலத்திலும் 7 பேரூராட்சிகள் அடங்கிய தொகுதி ஒன்றுக்கு ஒரு உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர் வீதம் பணியிடங்கள் ஏற்படுத்தலாம். உதவிப் பொறியாளர்/இளநிலைப் பொறியாளர் ஒவ்வொருவருக்கும் பணி ஆய்வாளர் இருவரை நியமிக்கலாம்.

### II. சிறப்பு பொறியாளர் பிரிவு

பல்வேறு மண்டலங்களில் நடைபெறும் மூலதனப் பணிகளை செயல்படுத்த கீழ்க்கண்டவாறு பொறியியல் பணியிடங்களை ஏற்படுத்தலாம்.

| வரிசை எண். | பணியிடத்தின் பெயர் | வரிசை எண். |
|---|---|---|
| 1. | உதவி செயற்பொறியாளர் | 5 |
| 2. | உதவி பொறியாளர்/ இளநிலை பொறியாளர் | 35 |
| 3. | பணி ஆய்வாளர் | 70 |
| 4. | வரைவாளர் | 5 |

மேற்படி பணியாளர்கள் பேரூராட்சிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்றும் அவர் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படவுள்ள பணிகளை மதிப்பீடு செய்து பேரூராட்சி தொகுதியின் அடிப்படையில் இப்பணியாளர்கள் சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் மண்டல உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து பயன்படுத்தப்படுவார்கள் என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். தேவையைப் பொருத்து அவர்கள் ஒரு பேரூராட்சிகள் தொகுதியிலிருந்து வேறு பேரூராட்சி தொகுதிக்கு மாற்றப்படலாம் என்றும் அவ்வாறு இவர்கள் மாற்றிப் பணியமர்த்தப்படும் போது ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த தேவைப்படும் பொறியியல் உதவி கருத்தில் கொள்ளப்படும் என்றும் ஒரு உதவிசெயற் பொறியாளருக்கு சுமார் ரூ. 4.00 கோடி முதல் ரூ. 5.00 கோடி மதிப்பிற்கான பணிகள் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. செயற்பொறியாளர் மற்றும் அவருடன் இணைந்த வரைவாளர்கள் சென்னை பேரூராட்சிகள் இயக்ககத்தில் செயல்படுவார்கள் என்றும் மண்டல உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் பல்வேறு மண்டலங்களுக்கு மாற்றி நியமனம் செய்யப்படும் சிறப்பு பொறியியல் பிரிவைச் சேர்ந்த உதவி செயற்பொறியாளர்கள் சம்பந்தப்பட்ட மண்டல தலைமையிடத்தைத் தங்களது தலைமையிடமாகக் கொண்டிருப்பார்கள் என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார். உதவிபொறியாளர்/இளநிலை பொறியாளர் மற்றும் பணி ஆய்வாளர்கள் ஆகியோரைப் பொறுத்தமட்டில் மண்டலத்திற்பட்ட பேரூராட்சிகள் தொகுதியில் அடங்கிய பேரூராட்சிகளில் ஒன்றை தலைமையிடமாக நிர்ணயம் செய்யலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

4. பொறியாளர் பணியிடங்களுக்கான ஊதியத்திற்காக தற்போது பணிகளின் அளவுக்கேற்ப விகிதாச்சார அடிப்படையில் சம்பந்தப்பட்ட பேரூராட்சி நிதியிலிருந்து பெறப்பட்டு செலவிடப்படுகிறது. அரசு மான்யத்தை பேரூராட்சிகளுக்கு வழங்கி பின்னர் அவைகளிடமிருந்து மீளப் பெறப்பட்டு, ஊதியம் வழங்கப்படுவதனால் பேரூராட்சிகள் வாரியாக கணக்குகள் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. இதனால் நீண்ட கால நலன்களான விடுப்பூதியம், நிலுவை ஊதியம் போன்றவற்றை வழங்குவதில் சிரமம் ஏற்படுகின்றன என்றும் எனவே பொறியாளர்கள் ஊதியம் மற்றும் பொறியியல் துறை தொடர்பான நிர்வாகச் செலவுகளுக்காக பேரூராட்சிகளுக்கு வழங்கப்படும் அரசு மான்யத்தில் 4% தொகையை பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. தற்போது உள்ளாட்சி மன்றங்களுக்கு கணிசமான அளவிற்கு பணிகள் செயல்படுத்த ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் உள்ளதால் வேறு துறைகளிலிருந்து மாற்றுப் பணி அடிப்படையில் தற்போது பேரூராட்சிகளில் பணிபுரிந்துவரும் 25 பணி மேற்பார்வையாளர்களை அவர்களது தாய்த்துறைக்கு திருத்தியனுப்பலாம் என்றும் பேரூராட்சிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதை ஏற்க முடிவு செய்து பேரூராட்சித் துறையில் உள்ள பொறியியல் பணியிடங்களையும் சேர்த்து கீழ்க்கண்டவாறு பொறியாளர் பணியிடங்களை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்குகிறது.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் மற்றும் ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | செயற்பொறியாளர்<br>(ரூ.10,000–325–15200) | 1 |
| 2. | உதவி செயற்பொறியாளர்<br>(ரூ. 8,000–275– 13500)<br>மண்டலம் – 16<br>சிறப்பு பிரிவு – 5<br>மொத்தம் 21<br>(15 பணியிடங்கள் ஏற்கனவே உள்ளன) | 21 |

| | | | |
|---|---|---|---|
| 3. | உதவிப் பொறியாளர்/ | 125 | |
| | இளநிலைப் பொறியாளர் | | |
| | (ரூ. 6500–200–11100) | | |
| | மண்டலம் | – 90 | |
| | சிறப்பு பிரிவு | – 35 | |
| | மொத்தம் 125 | | |
| | (67 பணியிடங்கள் | | |
| | ஏற்கனவே உள்ளன) | | |
| 4. | வரைவாளர் | | 23 |
| | (ரூ.4500–125–7000) | | |
| | செயற்பொறியாளர் | 2 | |
| | அலுவலகம் | | |
| | மண்டல உதவி | | |
| | செயற்பொறியாளர் | | |
| | அலுவலகம் | 16 | |
| | சிறப்பு பிரிவு | | |
| | உதவி செயற்பொறியாளர் | | |
| | அலுவலகம் | 5 | |
| | மொத்தம் | 23 | |
| 5. | பணிஆய்வாளர் | | 250 |
| | (ரூ.3050–75–3950–80–4590) | | |
| | மண்டலம் | 180 | |
| | சிறப்பு பிரிவு | 70 | |
| | மொத்தம் | 250 | |

புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள மேற்கண்ட பொறியியல் பணியிடங்களுக்கான நபர்களை மாற்றுப் பணி அடிப்படையில் நகராட்சி பொறியாளர்கள் அலகிலிருந்து பெற்று பணியமர்த்தப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

7. பொறியியல் பணியிடங்களுக்கான சம்பளம் மற்றும் இதர செலவுகளுக்காக மாறிய நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பேரூராட்சிகளுக்கு ஆண்டு தோறும் வழங்கப்படும் ஒப்படைப்பு நிதியிலிருந்து (Devolution of Funds) 4% தொகை பிடித்தம் செய்யப்பட்டு பேரூராட்சிகள் இயக்குநரிடம் ஒப்படைக்கப்படும். இந்த தொகை பொறியியல் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மண்டல உதவி இயக்குநர்கள் மூலமாகவும் தலைமை அலுவலகம் மூலமாகவும் பகிர்ந்தளிக்கப்படும்.

8. தற்போது மாற்றுப்பணி அடிப்படையில் பேரூராட்சிகளில் பணிபுரிந்துவரும் 25 பணி மேற்பார்வையாளர்களை (Oversees) அவர்களை தாய்த்துறைக்கு திருப்பியனுப்புவது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறைத் தலைவருடன் பேசி மேல் நடவடிக்கை எடுக்கும்படி பேரூராட்சிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. அடுத்த 5 ஆண்டுகளுக் பேரூராட்சித் துறையில் கூடுதலாக பொறியாளர் பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தக் கூடாது என்று அரசு ஆணையிடுகிறது.

10. இவ்வாணை நிதித்துறையின் 336/இ.செ(எஸ்.கே.எஸ்)/மை.ம.ஆ.பி/98–1 எண்ணும் 28.5.98 நாளுமிட்ட அ.சா.கு.வில் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**

அரசுச் செயலாளர்